P.N. NO:- 930                                                    நாள் :- 04-12-11

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 4.12.2011

திருவள்ளூர் மாவட்டம், கோடுவெளி மதுரா கள்ளிக்குப்பம் கிராமத்தில் வசித்து வரும் திரு. ஏகன் என்பவரது மகன் கோவிந்தராஜ் 30.11.2011 அன்று அவரது வீட்டில் உள்ளவர்களுக்கு உடல்நிலை சரியில்லாததால், மருந்து வாங்கி வரும் வழியில் வாகனத்திற்கு வழிவிட்டு ஒதுங்கும்போது, சோழவரம் செல்லும் பூச்சிக் கால்வாயில் விழுந்து தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த கோவிந்தராஜ் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த கோவிந்தராஜ் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி வெளியீடு)
செய்தி மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009

D:\mydocuments\Condolences 2011\Road accident at Tiruvallur 3.12.11.doc